குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
சி.சி.எண். 182/2013

அ.சா.1

2024–ம் ஆண்டு மார்ச் 28–ம் தேதி வியாழக்கிழமை அரசு தரப்பு சாட்சி 01 –வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.ஆனந்தன் என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | வெங்கடேஷ் | ஜாதி | |
| தந்தை பெயர் | அய்யம்பெருமாள் | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 01.58 மணி,

Accused A2.Subramani present. A1.Ramasamy died and charge abated. Advocate Mr.Siddhartha sankar present for Advocate Mr.Prabakaran present for accused. Advocate APP Mr.M.Suresh Present.

**முதல் விசாரனை:**

1. நான் பாரக்கல்லூரில் குடியிருந்து கொண்டு கட்டிட வேலை செய்து வருகிறேன். நான் 2013 ம் ஆண்டு சொந்தமாக TN 30 U 9419 டாரஸ் லாரி வைத்து இருந்தேன். கடந்த 16.06.2013 ம் தேதி மேற்படி லாரியை இரவு பாரக்கல்லூரில் உள்ள மாரியம்மன் கோவில் அருகே நிறுத்திவிட்டு வீட்டிற்கு சென்று விட்டேன். மறுநாள் காலை 06.30 மணிக்கு வந்து பார்த்த போது நான் நிறுத்தியிருந்த இடத்தில் லாரி இல்லை.

2. நான் லாரிக்கு பைனான்ஸ் வழங்கிய நிறுவனத்திற்கு போன் செய்து தகவல் சொன்னேன். அவர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க சொன்னார்கள். காவல் நிலையம் சென்று இது சம்பந்தமாக புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எனது லாரியின் மதிப்பு சுமார் 10 லட்சம் இருக்கும்.

3. மறுநாள் போலீசார் என்னை தொடர்பு கொண்டு எனது லாரி ஆரூர்பட்டி ஏரி

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2024.03.28 17:47:00 +0530

அருகே இருந்து கண்டுபிடித்து கொண்டு வந்துவிட்டதாக சொன்னார்கள். நான் காவல் நிலையத்திற்கு சென்று அங்கிருந்த எனது லாரியை அடையாளம் காட்டினேன். அதன்பின்பு நீதிமன்றத்தில் மனு செய்து லாரியை திரும்ப பெற்றுக் கொண்டேன். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள லாரி என்னுடையது தான். **(அந்த புகைப்படம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

4. மேற்படி லாரியை கடன் தொகை நான் திருப்பி செலுத்த முடியாததால் மேற்படி லாரி வாங்க கடன் வாங்கிய பைனான்ஸ் நிறுவனம் லாரியை எடுத்து சென்றுவிட்டது. அதனால் தற்போது நீதிமன்றத்தில் ஆஜர் செய்யமுடியவில்லை. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

5. நான் படிக்கவில்லை. புகாரை நான் கைப்பட எழுதவில்லை என்றாலும் கையெழுத்து மட்டும் போட்டேன் என்றாலும் சரி. இவ்வழக்கு சம்பந்தமாக காணாமல் போனதாக சொல்லப்படும் லாரியின் ஆவணத்தை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எனது வண்டி திருடு போகவில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு புகாரை கொடுத்த பின்பு சுமார் 1 மாதம் கழித்து இந்நீதிமன்றத்தில் எனது வாகனத்தை மனு செய்து பெற்றுக் கொண்டேன்.

**மறு விசாரணை : இல்லை**

S SHARMILA Digitally signed by S SHARMILA Date: 2024.03.28 17:47:06 +0530

விசாரணை முடிந்த நேரம்: 02.11 மணி,